## விருதுநகர் பட்டாசு ஆலையில் வெடி விபத்து:

# உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்!

### தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தல்!

சென்னை, ஏப்.21-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின்குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு மாண்புமிகு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இது குறித்து அறிந்ததுமே மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு, தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறுகழகத்தலைவரும்முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்

# செல்வப்பெருந்தகை பரப்புரையை முடக்க சதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஏப். 21-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சகோதரர் செல்வப் பெருந்தகை அவர்களது பரப்புரையை முடக்க நினைக்கும் சதிக்குக் கடும் கண்டனம்!**

**இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதை மறந்து, தேர்தல் பிரச்சாரம் முடிவடைய இன்னும் 48 மணிநேரம் கூட இல்லாத நிலையில், எதிர்க்கட்சியினரை முடக்க, தோல்வி பயத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துகொண்டிருக்கும் அட்டூழி யத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.




# விருதுநகர் பட்டாசு ஆலையில் வெடி விபத்து!

## 22 பேர் உயிரிழப்பு!

*விருதுநகர், ஏப்.21*

*விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டி பகுதியில் செயல்பட்டு வந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் குறைந்தது 23 பேர் உயிரிழந்த நிலையில் ஆறு பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*விருதுநகர் மாவட்டம் வாச்சக்காரப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கட்டனார்பட்டி பகுதியில்முத்துமாணிக்கம் என்பவருக்கு சொந்தமான வனஜா பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் பணியாளர்களாக உள்ளனர்.*

*இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் இந்த ஆலையில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தால் அங்கு பணியாற்றி கொண்டிருந்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பலத்த வெடி விபத்தால் மூன்றுக்கும் மேற்பட்ட அறைகள் சிதறி சேதமடைந்ததுடன், சில கட்டடங்கள் முற்றிலும் தரைமட்டமாகின.*

*இந்த விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் தீயணைப்புத்துறையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். முதல் கட்ட தகவல்களின்படி 20 பேரின் உடல்களை மீட்டனர்.*

*மேலும் கடுமையான தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட 6 பேர் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*கடந்த சில நாட்களுக்கு முன்பு விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை பகுதியில் நடந்த பட்டாசு ஆலை விபத்தில் 4 பேர் உயிரிழந்த நிலையில், மீண்டும் அதே மாவட்டத்தில் இவ்வளவு பெரிய அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு நடந்த மிகப்பெரிய பட்டாசு ஆலை விபத்தாகவும் இது கருதப்படுகிறது.*

*பட்டாசு ஆலை வெடி விபத்து குறித்து மாவட்ட ஆட்சியர் சுக புத்ரா மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா நேரில் ஆய்வு செய்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர், ”பட்டாசு ஆலைகளில் ஞாயிற்றுக்கிழமை வேலை செய்வதே முதல் விதிமீறல்தான்” என்றார். மேலும் ஆலை உரிமம் பெற்றே இயங்கி வந்ததாக கூறிய அவர், வேறு விதிமீறல்கள் குறித்து ஆய்வு நடைபெற்று வருவதாகக் கூறினார்.*

*மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா செய்தியாளரிடம் பேசுகையில், “வெடி விபத்து ஏற்பட்ட பட்டாசு ஆலை உரிமையாளர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது உரிமையாளர் போர்மேன் ஆகியோர் தலைமறைவாக உள்ளதால் அவர்களை பிடிப்பதற்கு நான்கு சிறப்பு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது” என்றார்.*

*உரிமம் இல்லாமல் இயங்கும் பட்டாசு ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்எனமாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா எச்சரித்தார்.*

*விபத்துக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.*

*மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரை கேட்டுக்கொண்டுள்ளேன். மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு, தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தியுள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.*

*விபத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோதி, தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் நிகழ்ந்த விபத்து மிகுந்த வேதனையளிக்கிறது. தங்களின் அன்புக்குரியவர்களை இழந்து வாடுவோருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.*

# நீலகிரி - ஆனைப்பள்ளத்தில் கழக வேட்பாளர் கே.எம்.ராஜு வாக்கு சேகரிப்பு!

## பழங்குடியின மக்கள் நடனமாடி உற்சாக வரவேற்பு!

நீலகிரி, ஏப். 21-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் கடைக்கோடியில் அடர்ந்த வனப் பகுதியில் அமைந்துள்ளது ஆனைப்பள்ளம் பழங்குடியின கிராமம். இங்கு குரும்பர் மற்றும் இருளர் பழங்குடியின மக்கள் யானை, புலி, கரடி, சிறுத்தை போன்ற வன விலங்குகள் வாழக்கூடிய அடர்ந்த வனப்பகுதியில் வாழ்கின்றனர். இவர்களுக்கு சாலை வசதி இல்லாததால் கிராம மக்கள் கடும் அவதியடைந்து வந்தனர்.



மருத்துவம், அடிப்படை தேவை என்றால் 6 கிலோமீட்டர் தொலைவு அடர்ந்த வனப்பகுதியில் நடந்து சென்று வந்தனர். இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஆட்சிக்கு வந்தால் சாலை வசதி அமைத்து தரப்படும் என வாக்குறுதி அளித்த தி.மு.க. வினர். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பிறகு ஆனைப்பள்ளம் பழங்குடியினர் கிராமத்திற்கு செல்ல 2 கோடி நிதியில் புதிய சாலை அமைத்தனர். வாக்குறுதி நிறைவேற்றிய பின் தற்போது நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் குன்னூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.எம்.ராஜு மற்றும் அரசு கொறடா ராமச்சந்திரன் ஆகியோர் வாக்கு சேகரிக்க தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்ட புதிய சாலை வழியாக பழங்குடியினர் கிராமத்திற்கு சென்றனர். அங்கு சென்ற தி.மு.க. வேட்பாளர் கே.எம்.ராஜுவிற்கு பழங்குடியின மக்கள் பாரம்பரிய இசையை வாசித்து உற்சாகமாக நடனமாடி வேட்பாளரை வரவேற்றனர். உதயசூரியன் கோலமிட்டு , நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. விற்கே வாக்களிப்போம் என பழங்குடியின மக்கள் ஒட்டுமொத்தமாக உறுதி அளித்தனர். இந்த கிராமத்திற்கு கலைஞர் ஆட்சியில் வண்ண தொலைக்காட்சி வழங்கும் போது மின்சாரம் வழங்கியது குறிப்பிடத்தக்கது. பிரச்சாரத்தின் போது உலிக்கல் பேரூராட்சி கழக செயலாளர் ரமேஷ், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் பெல்லி, உலிக்கல் தேர்தல் பொறுப்பாளர் கோவர்தன், அவைத்தலைவர் போஜன் உட்பட தி.மு.க.வினர் உடன் இருந்தனர்.



திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் சி.வி.கணேசனை ஆதரித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் திட்டக்குடியில் பிரச்சாரம் செய்தார். உடன் ஒன்றிய, கழக, நகர கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தோழமைக் கட்சிகள் நிர்வாகிகள் உள்ளனர்.

## துரிஞ்சல் ஆற்றின் குறுக்கே பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று

# ரூ.6.70 கோடியில் உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தந்துள்ளேன்!

## வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கு.பிச்சாண்டி பேச்சு!

*கீழ்பென்னாத்தூர், ஏப்.21-*

*கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி அவர்கள் துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட காரியந்தல், மருத்துவம்பாடி, மருத்துவம்பாடி ஆதிதிராவிடர் குடியிருப்பு, முனியப்பந்தாங்கள், வடபுழுதியூர், புது நெல்லிமேடு, நார்த்தாம்பூண்டி ஆதிதிராவிடர் குடியிருப்பு, நார்த்தாம்பூண்டி உள்ளிட்ட கிராமங்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.*





*பிரச்சாரத்தின் போது அவர் பேசுகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக அரசு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை எடுத்துரைத்தார். மேலும், “ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும்” என்ற தாரக மந்திரத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.*

*மேலும் அவர் தொகுதியில் செய்யப்பட்ட வளர்ச்சி பணிகளை விளக்கினார். நெடுஞ்சாலைத்துறை மற்றும் நபார்டு கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட துரிஞ்சாற்றின் குறுக்கே வெரையூர்-தண்டரை கிராமங்களை இணைக்கும் வகையில் ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் அமைத்து தந்துள்ளேன் என்றும், அதேபோல் தி.வலசை - சு.வாளவெட்டி கிராமங்களை இணைக்கும் வகையில் ரூ.6.70 கோடி செலவில் மற்றொரு உயர்மட்ட பாலமும் கட்டித் தந்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.*

*நரியமங்கலம் ஊராட்சியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், தீவலசை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடம், திருவானை முகாம் ஆதிதிராவிடர் பகுதியில் பல்நோக்கு கட்டிடம், கூட்ரோட்டில் நிழற்குடை, வரையூர் பகுதியில் பயணியர் நிழற்குடை உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தந்துள்ளேன் என்றும் கூறினார்.*

*மேலும் அவர் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் வருமாறு:*

*தகுதி பெற்ற இல்லத்தரசிகளுக்கு 8,000 மதிப்பிலான எலக்ட்ரானிக் பொருட்கள் வாங்க “இல்லத்தரசி கூப்பன்” வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

*மகளிர் உரிமைத் தொகை 1,000 இலிருந்து 2,000 ஆக உயர்த்தப்படும்.*

*“விடியல் பயணம்” திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து வசதி ஏற்படுத்தப் படும்.*

*“நான் முதல்வன்”, “புதுமைப்பெண்”, “தமிழ் புதல்வன்” திட்டங்களின் உதவித்தொகை 1,500 ஆக உயர்த்தப்படும்.’*

*கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி திட்டம் தொடர்ந்து வழங்கப்படும்.*

*முதியோர், கைம்பெண்கள் மற்றும் 50 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்களுக்கு மாதம் 2,000 ஒய்வூதியம் வழங்கப்படும்.*

*முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 8ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும்.*

*“கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் 10 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும்.*

*விவசாயிகளுக்கு நவீன மின்சார பம்பு செட்டுகள் வழங்கப்படும்.*

*நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3,500 ஆகவும், கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4,500 ஆகவும் உயர்த்தப்படும்.*

*மேலும், கீழ்பென்னாத்தூர் தாலுகா உருவாக்கப் பட்டதற்கும், தொகுதி வளர்ச்சிக்கும் தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முக்கிய காரணம் எனக் குறிப்பிட்டார். சட்டமன்றத்தில் இத்தொகுதி மக்களுக்காக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திட்டங்களை நிறைவேற்றியுள்ளேன் என்றும், மீண்டும் வெற்றி பெற்றால் மீதமுள்ள குறைகளையும் சரி செய்வேன் என்றும் உறுதியளித்தார்.*

*“என்னை உங்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியானவாக்குவித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள்” என்று பொதுமக்களிடம் அன்புடன் கேட்டுக் கொண்டார்.*

*இந்த நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஆரஞ்சி.எஸ். ஆறுமுகம் வி பி அண்ணாமலை பா. ராமஜெயம், ஒருங்கிணைப்பாளர் கு. பாலசுப்பிரமணி, பொன். கருணாநிதி, எம். குமார், சிவராமன், வீ. தினகரன், பி. கோவிந்தசாமி, ஜே. சிவகுமார், ஏ. சக்திவேல், எம். ஆர். குபேரன், எம்.ஆர். கே. வினோத்குமார், பி. தாமோதரன், பி. கணேசமூர்த்தி, கே. பழனி, டி. அருணாச்சலம், ராதாகிருஷ்ணன், டி. மோகன், ஆறுமுகம், எல். சதாசிவம், எஸ். பிரபாகரன், எம்.எஸ். தங்கமணி, கே. சேகர், எம். கணேசன், டி. சண்முகம், எஸ். நடராஜன், ஆர். ஆதிமூலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*மேலும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாவட்ட தலைவர்கள், பொறுப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.*

*பொதுமக்கள் உற்சாகமாக வேட்பாளரை வரவேற்று, பட்டாசு வெடித்தும், கொடிகளை ஏந்தியும், பெண்கள் ஆரத்தி எடுத்தும் ஆதரவு தெரிவித்தனர்.*

# வயிற்றுப் பசி தீர்ந்ததால், அறிவு பசி வளர்ந்தது!



**நே**ரு மாமா வந்தாரு, நல்லா படிக்கச் சொன்னாரு!
கலைஞர் தாத்தா வந்தாரு, முட்டையுடன் சத்துணவு தந்தாரு!
ஸ்டாலின் மாமா வந்தாரு, காலை உணவு தந்தாரு!
வயிற்றுப் பசி தீர்ந்ததால், அறிவு பசி வளர்ந்தது!
நல்ல மதிப்பெண் பெற்றதால்,
ஆசிரியரின் பாராட்டும் அதிகமாக கிடைத்தது!
அம்மாவுக்கு நிம்மதி! அப்பாவுக்கு ஆனந்தம்!
காலை உணவுத் திட்டத்தால்,
குடும்பத்தில் எந்நாளும் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது!

ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சியுடன் வாழ
திட்டங்கள் பல தந்த
ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும்!
தமிழ்நாடு வெல்லட்டும்!

**திருமதி பி. விஜயலட்சுமி**